**அம்பலாந்தோட்டை பிரதேச சபை - 2022**

---

## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயற்பாட்டுக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று, முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2022 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகார சட்டத்தின் உப பிரிவு 172(1) மற்றும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிச குடியரசு அரசியலமைப்பின் 154(1) உறுப்புரையில் உள்ளடக்கிய ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களினைத் தவிர்த்து, அம்பலாந்தோட்டை பிரதேச சபையின் 2022 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.6 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், இந்த அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

பிரதேச சபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் பிரதேச சபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- பிரதேச சபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- உரிய எழுத்துமூல சட்டத்திற்கு அல்லது பிரதேச சபையினால் வழங்கப்பட்ட ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் பிரதேச சபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

**1.5 ஏனைய சட்டத் தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை**

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விஷேட ஏற்பாடுகள் அடங்கியுள்ளன.

(அ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iii) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்குகின்றன.

(ஆ) 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ)(iv) பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ள தேவைப்பாடின் படி, முன்னைய ஆண்டின் போது என்னால் மேற்கொள்ளப்பட்ட பரிந்துரைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்களில் அடங்கியுள்ளன.

**1.6 நிதிக் கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்**

**1.6.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது விபத்துக்குள்ளாகியிருந்த கப் வண்டி ஒன்று தொடர்பாக பெற வேண்டிய ரூபா 6,390,000 இற்கான காப்புறுதி நட்டஈட்டுத் தொகையை கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | பெற வேண்டிய மீதிகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டின் போது மேற்கொள்ளப்பட்டிருந்த 02 நிர்மாண வேலைகள் தொடர்பாக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 2,231,846 தொகை குறைவாக ஒதுக்கப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்குதல் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (இ) | மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு மாகாண குறித்தொதுக்கிய அபிவிருத்தி மானியத்தின் கீழ் நீர் தொட்டிகள் மற்றும் சட்டகங்கள் கொள்வனவு செய்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1,320,000 தொகைக்காக கடன்பட்டோர் ஏற்பாடுகள் மேற்கொண்டிருக்கவில்லை. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | கடன்பட்டோர்கள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டிற்கான சிட்டையிடைப்பட்ட நீதிமன்றத் தண்டப்பண வருமானம் ரூபா 1,011,000 தொகை மற்றும் முத்திரைக் கட்டண வருமானம் ரூபா 467,000 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | வருமானங்கள் சரியாக இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (உ) | முன்னைய ஆண்டிற்காக நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் மிகை ஒதுக்கம் ரூபா 504,312 தொகை திரட்டிய நிதியத்திற்கு சீராக்கல் செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | பெற வேண்டிய மீதிகள் சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்ய வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டின் போது நிரந்தர பதவியணிக்காக செலுத்தப்பட்ட சம்பளம் மற்றும் மந்திரிமார் கொடுப்பனவு மீளளிப்பின் போது மிகையாக கிடைத்திருந்த ரூபா 393,695 தொகை செலுத்த வேண்டிய மீதியொன்றென கணக்கீடு செய்திருக்கவில்லை. | 2023 ஆண்டின் கணக்குகள் தயாரிக்கும் போது சரி செய்யப்படும். | மீளளிப்புச் செய்யப்பட்ட செலவுகளை சரியாக இனங்கண்டு கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டின் பொது கொள்வனவு செய்திருந்த ரூபா 142,900 இற்கான இயந்திர உபகரணங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | இயந்திர உபகரணங்களின் கீழ் கணக்கீடு செய்யப்படும் என. | நிலையான சொத்துக்களை இனங்கண்டு சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடத்தின் இறுதி இருப்பு ரூபா 129,883 தொகை குறைவாக காட்டப்பட்டிருந்தது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | இருப்புக்கள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.6.2 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டு இறுதியிலுள்ளவாறு சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதிகள் மற்றும் அதனொடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே ரூபா 258,507 இற்கான வித்தியாசமொன்று காணப்பட்டது. | எதிர்காலத்தில் சரி செய்யப்படும் என. | குறிப்பிட்ட மீதிகளின் வித்தியாசங்களை இணக்கஞ் செய்து சரி செய்ய வேண்டும். |

### 1.6.3 கணக்காய்வுக்குத் தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 3,158,134 தொகைக்கான 03 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக பரிசோதனை மேற்கொள்ள முடியாதிருந்தது. | நிலுவை மீதிகளுக்காக தயாரிக்கப்பட்ட விரிவான அட்டவணை சபையில் காணப்படவில்லை. | நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதிப்படுத்தும் சான்றுகள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

## 1.7 இணங்காமை

### 1.7.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | | இணங்காமைகள் | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை அதிகாரச் சட்டம் | | | |
| | i. பிரிவு 126 | பிரதேச சபை அதிகார சட்டத்தின் 126 பிரிவின் கீழ் 30 பிரதான காரணங்களை நிறைவேற்றுவதற்காக துணை விதிகள் சட்ட ஆக்கஞ் செய்ய வேண்டியிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 திகதியளவிலும் 11 விடயங்களுக்காக மாத்திரம் துணை விதிகள் விதிக்கப்பட்டிருந்தது. | தேவைப்பாட்டின் படி எதிர்காலத்தில் ஏனைய துணை விதிகள் தழுவுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| | ii. பிரிவு 134(2) | முன்னேற்றப்பட்ட பிரதேசங்களை கால ரீதியாக இனங்கண்டு வீதவரி அதிகார பிரதேசங்களில் மாற்றம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வீதவரி அதிகார பிரதேசங்கள் மாற்றம் செய்யப்படும் என. | அதிகார சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | 1946 இன் 30 ஆம் இலக்க வரிகள் மற்றும் பெறுமதி மதிப்பீடு செய்யும் சட்டத்தின் பிரிவு 20 | வீதவரி ஆதனங்கள் 05 வருடங்களுக்கு ஒருமுறை பெறுமதி மதிப்பீடு செய்து வீதவரி அறவீடு செய்யப்பட வேண்டியிருந்த போதிலும் அவ்வாறு செய்யாமல் 2011 ஆண்டின் பெறுமதி மதிப்பீட்டு அறிக்கையை அடிப்படையாக கொண்டு மீளாய்வாண்டின் போது வீதவரி அறவீடு செய்யப்பட்டிருந்தது. | வீதவரி ஆதனங்களை பெறுமதி மதிப்பீடு செய்வதற்காக பெறுமதி மதிப்பீட்டு உத்தியோகத்தர்கள் சபைக்கு வராமையால் பழைய பெறுமதி மதிப்பீட்டின் படி வீதவரி அறவீடு செய்யப்பட்டதென. | சட்டத்திற்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (இ) | 2016 திசெம்பர் 29 திகதிய 30/2016 இலக்கம் கொண்ட பொது நிருவாக சுற்றறிக்கையின் பந்தி 3.1 | சபைக்கு சொந்தமான ஓட்ட நிலையில் காணப்பட்ட 25 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை கணக்காய்வுத் திகதி வரை மேற்கொண்டிருக்காததுடன், 13 வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படாத கால வீச்சு 1 வருடத்திற்கு 5 வருடங்களுக்கும் இடைபட்ட காலமாக காணப்பட்டதுடன், மீதியான 12 வாகனங்கள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. | எதிர்காலத்தில் இந்த வாகனங்களின் எரிபொருள் எரிவுப் பரிசோதனை மேற்கொள்ளப்படும் என. | சுற்றறிக்கை இணங்க செயற்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 7,363,800 தொகையாகக் காணப்பட்டதுடன், அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் வருமானத்தை மிகைத்த செலவு ரூபா 2,412,189 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

தலைவரினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | 2022 | | | | 2021 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| வருமான மூலம் | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரி மற்றும் வரி | 5,581,000 | 5,377,655 | 6,696,803 | 3,857,460 | 4,962,100 | 4,919,474 | 4,187,533 | 5,176,608 |
| வாடகை | 254,271,000 | 12,493,686 | 14,023,430 | 8,748,833 | 18,037,500 | 18,436,335 | 11,320,957 | 10,278,577 |
| அனுமதிப் பத்திரக் கட்டணம் | 2,778,000 | 2,023,292 | 2,448,562 | 760,245 | 2,750,200 | 1,970,965 | 1,370,510 | 1,185,515 |
| ஏனைய வருமானங்கள் | 18,543,000 | 8,486,845 | 8,552,093 | 549,911 | 31,503,290 | 7,199,280 | 6,616,896 | 615,159 |
| மொத்தம் | 281,173,000 | 28,381,478 | 31,720,888 | 13,916,449 | 57,253,090 | 32,526,054 | 23,495,896 | 17,255,859 |

#### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றல்

சபையின் வருமானம் சேகரித்தல் செயலாற்றல் தொடர்பாக அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய வீதவரி ரூபா 3,574,690 தொகை அறவீடு செய்வதற்காக பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 158(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகை எதிர்காலத்தில் அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வரி வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |
| (ஆ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்குச் சொந்தமான 131 கடையறைகளிலிருந்து பெற வேண்டிய கடையறை வாடகை மற்றும் தண்டப் பணம் ரூபா 1,234,810 தொகையினை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகார | ரூபா 102,435 தொகை அறவீடு செய்யப்பட்டு ரூபா 64,965 தொகை ஆளுனரின் அங்கீகாரத்தின் மீது பதிவழிக்கப்பட்டதுடன், மீதித் தொகை அறவீடு செய்யப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவிடப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சட்டத்தின் பிரிவு 159(1) இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (இ) | ஹுங்கம பொதுச் சந்தையில் கடையறைகள் பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு சபைக்கு 2019 ஏப்ரல் 01 திகதி HT/RP/936 இலக்கம் கொண்ட கடிதத்தின் படி புதிய பெறுமதி மதிப்பீட்டு வாடகை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்காமையால் 2022 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 12 கடையறைகளிலிருந்து கிடைக்க வேண்டிய மொத்த நிலுவை கடையறை வாடகை ரூபா 1,035,000 தொகையாக இருந்தது. | 12 கடையறைகளில் 06 இனை பராமரிப்பு அலுவல்களுக்காக உடைத்து அகற்றப்பட்டு தற்காலிக கடையறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன், அதற்காக பெறுமதி மதிப்பீடொன்று பெற்றுக்கொள்வதற்காக பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்திற்கு கடிதம் அனுப்பப்பட்டதுடன், மீதியான கடையறைகளிலிருந்து பெற வேண்டிய ரூபா 507,000 தொகை ஆதனங்களை தடைசெய்தல் அல்லது கடையறைகளை உரித்தாக்கல் உரித்தாக்கல் மூலம் அறவீடு செய்யப்படும் என. | பெறுமதி மதிப்பீட்டு வாடகையை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஈ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு வருடாந்தம் வாடகைக்கு கொடுக்கப்படும் 10 ஆதனங்களிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 4,310,998 தொகை மற்றும் முன்னைய 03 ஆண்டுகள் தொடர்பான டென்டர் வாடகைக்கு வழக்குகள் தாக்கல் செய்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1,427,941 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ஆளுனரின் அங்கீகாரத்தின் மீது ரூபா 2,113,708 தொகை பதிவழிக்கப்பட்டதெனவும், முன்னைய ஆண்டுகள் தொடர்பாக கிடைக்க வேண்டிய ரூபா 1,427,941 இற்கான மீதி தொடர்பான தகவல்கள் கண்டறிய முடியாமல் உள்ளது என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு சபைக்கு சொந்தமான வாகனங்கள் மற்றும் உபகரணங்கள் வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக பெற வேண்டிய ரூபா 1,775,084 தொகை நிலுவையாக காணப்பட்டது. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஊ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 78 வர்த்தக அலகுகளிலிருந்து பெற வேண்டிய அனுமதிப்பத்திரக் கட்டணம் ரூபா 72,750 தொகை அறவீடு செய்வதற்கு பிரதேச சபை அதிகார சட்டத்தின் பிரிவு 149 இற்கு இணங்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கட்டணம் செலுத்தப்பட்டது 49 வியாபார நிலையங்களுக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியிலுள்ளவாறு 62 நிறுவனங்களிலிருந்து பெறவேண்டிய அறிவித்தல் பலகைக் கட்டணம் ரூபா 687,495 தொகையினை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்காக வழக்குத் தாக்கல் செய்யப்படுகின்றன என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |
| (ஏ) | மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய சேவைக் கட்டணம் ரூபா 180,095 தொகையினை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | நிலுவைத் தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவை வருமானம் விரைவாக அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஐ) | மாகாண சபையின் பிரதான செயலாளரிடமிருந்து மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பெற வேண்டிய நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம் முறையே ரூபா 1,874,045 தொகை மற்றும் ரூபா 19,016,320 தொகையாக இருந்தது. | பெற வேண்டிய முத்திரைக் கட்டணம் மற்றும் நீதிமன்றத் தண்டப்பணம் பெற்றுக்கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படும் என. | நிலுவைத் தொகையை பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | உடன்படிக்கைக்கு இணங்க துணை வாடகைக்கு கொடுப்பதற்கு முடியாத போதிலும், அம்பலாந்தோட்டை சந்தையின் 09 கடையறைகள் துணை வாடகைக்கு கொடுத்தல் தொடர்பாக உரிய நடவடிக்கை சபை முகாமைத்துவத்தினால் மேற்கொண்டிருக்கவில்லை. | துணை வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என உறுதிப்படுத்தப்பட்டால் வாடகை உடன்படிக்கை முடிவுறுத்தி மீண்டும் ஆதனத்தை டென்டர் பண்ணுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | உடன்படிக்கைக்கு இணங்க செயற்பட வேண்டும். |
| (ஆ) | ஹுங்கம பிரதேச சபை உப அலுவகத்தின் வருமான பரிசோதகரினால் சேகரிக்கப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 311,470 இற்கான வருமானம் மற்றும் சபையின் வருமானப் பரிசோதகர்கள் மூவரினால் 2022 ஆண்டின் 03 மாதங்களில் சேகரிக்கப்பட்டிருந்த ரூபா 177,614 தொகை 4 நாட்களுக்கும் 51 நாட்களுக்கும் இடைப்பட்ட காலம் கையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தது. | வெளிக் களத்தில் சேகரிக்கப்படும் பணம் அத்தினத்திலேயே அல்லது அதற்கு பின்னர் வரும் வேலை நாளிலன்று சபைக்கு செலுத்தும் படி உத்தியோகத்தர்களுக்கு அறிவுருத்தப்பட்டது என. | நிதிப் பிரமாணங்களுக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| சபைக்குச் சொந்தமான ஓட்ட நிலையில் காணப்படாத வாகனங்கள் மற்றும் 02 இயந்திரங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கு அல்லது அப்புறப்படுத்துதற்கு நடவடிக்கை எடுத்திருக்காததுடன், அந்த வாகனங்கள் செயற்படாது காணப்பட்ட காலம் தொடர்பாக தகவல்கள் காணப்படவில்லை. மீண்டும் 2021 பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் படி ஏலவிற்பனைக்காக ஒதுக்கப்பட்டிருந்த 03 வாகனங்கள் மற்றும் இயந்திரங்கள் ஏலவிற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. | 2021 ஆண்டிற்கான பண்டக் கணிப்பீட்டு அறிக்கையின் தீர்மானத்தின் படி ஏல விற்பனை செய்வதற்கு பரிந்துரைக்கப்பட்டிருந்த 02 டிரக்டர்கள் மற்றும் கப் வண்டி ஏல விற்பனை செய்வதற்கும் மற்றும் மீதியாக உள்ள வாகனங்களின் திருத்த வேலை மேற்கொள்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என. | வாகனங்களின் திருத்த வேலை மேற்கொண்டு பயன்படுத்துவதற்கு அல்லது அப்புறப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.3 செயற்திட்டங்கள், செய்பணிகள் நிறைவேற்றுவதில் தாமதங்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் உள்ளடங்கிய கூட்டுப்பெறுமதி ரூபா 422,113,000 தொகைக்கான 22 அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு சபையின் முகாமைத்துவத்திற்கு முடியாமல் இருந்தது. | எதிர்பார்த்த வருமானம் கிடைக்கப் பெறாமையால் இந்த அபிவிருத்திச் செயற்திட்டங்களை நிறைவேற்றுவதற்கு முடியாமல் போனது என. | பாதிடு செய்யப்பட்ட அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 அரச பெறுகை வழிகாட்டல் கோவையின் பிரிவு 5.6.1 படி பெறுகை மேற்கொள்வதற்கு உள்ள பண்டங்கள் அல்லது வேலைகளுக்காக விவரக் குறிப்புகள் உரிய பெறுகை குறிக்கோளினை அடைந்துகொள்வதற்காக தேவையான அளவு விபரிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், அவ்வாறு செயற்படாமல் கூட்டுப் பெறுமதி ரூபா 290,275 தொகைக்கான 04 வகையான பண்டங்கள் கொள்வனவு செய்திருந்ததுடன், பிரிவு 2.8.4 இன் படி கூட்டுப்பெறுமதி ரூபா 344,875 தொகைக்கான கொள்வனவு தொடர்பாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுவொன்று நியமனம் செய்து அறிக்கையொன்று பெற்றிருக்கவில்லை. | தொடர்ந்து வரும் கொள்வனவுகளின் போது குறிப்பிட்ட விவரக் குறிப்புகளை குறிப்பிட்டு மற்றும் தேவையான தொழில்நுட்ப குழுவின் பரிந்துரையை பெற்று கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | அரச பெறுகை வழிகாட்டல் கோவைக்கு இணங்க செயற்பட வேண்டும். |

### 3.5 ஒப்பந்த நிருவாகத்தில் குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சேதனப் பசளை செயற்களத்தின் கூரை மற்றும் இணைந்த செயற்களத்தை நிர்மாணிக்கும் நிர்மாண வேலை குறிப்பிட்ட தினத்தில் பூர்த்தி செய்யப்படாமையால் அறவிடப்பட வேண்டிய ரூபா 109,437 இற்கான தாமதக் கட்டணம் அறவீடு செய்திருக்கவில்லை. | தாமதக் கட்டணம் தடுத்து வைத்தல் பணம் செலுத்தும் போது கழித்து செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | தாமதக் கட்டணம் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | லியன்கஸ்தொட விளையாட்டுத் திடலை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக ரூபா 3,399,762 தொகை ஒப்பந்தக்காரருக்கு செலுத்தப்பட்டிருந்த போதிலும் அந்த தொகையில் 100 வொட் அளவான 04 பிலேஷ் மின் குமிழ்கள் வழங்கிப் பொருத்துதல் அதற்காக மின்சாரம் வழங்கும் கருமம் நிறைவேற்றப்பட்டிருக்காத போதிலும் ரூபா 126,981 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | செயற்திட்டத்திற்குரிய தடுத்துவைத்தல் பணம் செலுத்தும் போது கழித்துக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மிகையாக செலுத்தப்பட்டிருந்த தொகையினை பொறுப்புச் சொல்ல வேண்டிய உத்தியோகத்தர்களிடம் அறவீடு செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (இ) | லோலுபதான கல்கெடிய பாதையை அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலைக்காக ரூபா 1,889,670 இற்கான பூர்த்தி செய்யப்பட்ட வேலை அறிக்கை தயாரிக்கப்பட்டு கொடுப்பனவிற்காக சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், பாதையின் 409 சதுரமீற்றர்கள் அளவான கற்துகல்கள் இடுவதற்கு மற்றும் போக்குவரத்துக்காக ரூபா 111,378 தொகை கொடுப்பனவு அறிக்கையில் உட்படுத்தப்பட்டிருந்த போதிலும் 135 சதுரமீற்றர்களுக்கு மாத்திரமே கற்துகல்கள் இடப்பட்டிருந்தது. | பாதையை மீண்டும் கற்துகல்கள் பரத்தி தயாரிக்கும் படி ஒப்பந்தக்காரருக்கு அறிவிக்கப்பட்டதெனவும், அதனை நிறைவேற்றாவிடின் தடுத்து வைத்தல் பணத்திலிருந்து கழித்து கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என. | மேலதிக கொடுப்பனவு மேற்கொள்ளப்பட தொகையை மீண்டும் அறவீடு செய்ய வேண்டும். |

**3.6 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | சபையின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் கடமையாற்றுகின்ற உத்தியோகத்தர்கள் 09 பேர் அங்கீகரிக்கப்பட்ட கடமைகளுக்கு புறம்பாக வேறு கடமைகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர். | கணக்காய்வு அவதானிப்பை ஏற்றுக்கொள்கின்றேன் என. | ஊழியர்களை அங்கீகரிக்கப்பட்ட கடமைகளில் ஈடுபடுத்த வேண்டும். |
| (ஆ) | சேவையை விட்டுச்சென்ற, ஓய்வு பெற்ற மற்றும் சேவையை வெளியேற்றப்பட்ட உத்தியோகத்தர்கள 10 பேரிடம் விழா முற்பணம், விஷேட முற்பணம் மற்றும் இடர் கடன் என பெற வேண்டிய ரூபா 281,293 தொகையினை அறவீடு செய்திருக்காததுடன், அந்த நிலுவைக் கடனை அறவீடு செய்வதற்காக, அறவீடு செய்யும் செய்முறை ஒன்று தயாரித்து செயற்படுத்துவதற்காக சபையின் முகாமைத்துவம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | ரூபா 10,050 தொகை அறவீடு செய்யப்பட்டதுடன், மிகுதியான கடன் தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்கப்படுகின்றன என. | ஊழியர் கடனை அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |